**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 60/2019 P.W. 1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மகாலிங்கம் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. தங்கநாடார் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.03.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கொத்தனார் வேலைச் செய்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். 21.06.2013 ம் தேதி நான் 3 இலட்சம் ரூபாய் கடன் கேட்டேன். அவர் 5 பைசா வட்டியும், 5 சென்ட் இடத்தையும் எழுதிக் கொடுத்தால் காசு தருவதாக சொன்னார். நானும் அதற்கு சம்மதித்தேன். என்னுடைய 29 சென்ட் இடம் உள்ள பத்திரத்தை அவர் வாங்கினார். அந்த சொத்தின் எண் 163/2 ஆகும்.

2. அதில் 5 சென்ட் இடத்தை அவர் எழுதி எடுத்துக்கொண்டார். எழுத்து கூலி போக 2 ,55,000 கொடுத்தார். நான் அதற்கான வட்டியை மாதா மாதம் 15 ஆயிரம் வீதம் அவரது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் நான் செலுத்தினேன். 2015 ம் வருடம் செம்பரம்பாக்கம் ஏரி உடைந்ததில் எனக்கு வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. அதனால் வட்டிக் கொடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. ஊரில் செல்வராஜின் என்பவரின் மனைவி ராணி என்பவரிடமிருந்து அவர் பெற்றுக்கொண்டார். 4 மாதங்கள் அவ்வாறு பெற்றார். வீட்டில் சென்று வாங்கி வந்தார்.

3. நடராஜன் மனைவி சுதா என்பவரிடம் 2 மாதம் வட்டி பணத்தை வாங்கினார். அதன் பிறகு 4 மாதம் வட்டி என்னால் கொடுக்க முடியவில்லை. என்னை போண் போட்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஊருக்கு வரச்சொன்னார். நான் வந்தவுடன் 4 மாசம் வட்டி தரணும், இல்லை என்றால் வேறு

ஏற்பாடு செய்துக்கொடு என்று கேட்டார். நான் அதற்கு நீங்களே சொல்லுங்கள் நாம் பேசி தீர்த்துக்கொள்ளலாம் என்றேன். அதற்கு அவர் என்னிடம் 27 சென்ட் இருக்குல அதை என்பெயரில் எழுததிக்கொடுத்தா நான் லோண் வாங்கிதருகிறேன். என்னுடைய காசை எடுத்துக்கொண்டு மீதி காசை உன்னிடம் கொடுத்துவிடுகிறேன். 7 இலட்சம் ரூபாய் அவர்எடுத்துக்கொண்டு மீதி தொகையை என்னிடம் தருவதாக சொன்னார்.

4. எவ்வளவு தொகை என்று சொல்லவில்லை. 2016 ம் ஆண்டு நான் மேற்படி இடத்தை அவருக்கு பதிவுச் செய்துக்கொடுத்தேன். மறுநாள் என்னை குற்றம் சுமத்தப்பட்ட நபர் அவருடைய மனைவியுடன் அவரது காரில் என்னை நாகர்கோவிலுக்கு அழைத்துச் சென்று வாட்டர் டேங் ரோட்டில் உள்ள ஒரு அலுவலகத்தில் உட்கார வைத்து அங்கு ஒரு ஏஜெண்டிடம் பேசி லோண் வாங்கி தருவதற்கு என்னிடம் 20 ஆயிரம் கொடுக்க சொன்னார். நான் அந்த காசை கொடுத்தேன்.

5. அதன் பிறகு ப்ளூ பிரிண்ட் எடுக்க வேண்டுமென்று சொல்லி மணவாளக்குறிச்சி ஆற்றங்கரை பக்கத்தில் உள்ள ஒரு நபரிடம் 400 ரூபாய் கொடுக்க சொன்னார். ப்ளூ பிரிண்டையும் எடுத்துக்கொடுத்தார். பின்னர் லோண் தரவேயில்லை. அந்த லோண் ஆபிசிலில் உள்ளவர்கள் ஏமாற்றி சென்றுவிட்டார்கள். நான் இதுசம்மந்தமாக குற்றம் சுமத்தப்பட்ட நபரிடம் கேட்டதற்கு லோண் வரும் வரும் என்று சொன்னார். என் சொத்தையும் வாங்கிக் கொண்டு லோண் வாங்கி தருவதாக கூறி பொய் சொல்லி என்னை ஏமாற்றிவிட்டார்.

6. 2017 ம் வருடம் இது தொடர்பாக போலீசிலில் புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த மறுநாள் குற்றம் சுமத்தப்பட்ட நபர் என் வீட்டில் வந்து தகராறு செய்தார். நான் மேற்படி தகவலையும் போலீசாரிடம் சொன்னேன். போலீசார் வந்து சம்பவயிடத்திலேயே வந்து குற்றம்சுமத்தப்பட்ட நபரை கைது செய்து கொண்டு சென்றுவிட்டார்கள். நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். **மேற்படி புகார் மனு அ.சா.ஆ.1 ஆகும்.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

## குறுக்கு விசாரணை :

நான் காவல்நிலையத்தில் கொடுத்த புகார் மனுவை நான் எழுதவில்லை. நான் வாயால் சொன்னதை என் வக்கீல் எழுதிக் கொடுத்தார். நாகர்கோவில் வக்கீல் தான் எழுதிக்கொடுத்தார். நான்சொன்னதை தான் அவர் எழுதினார். நான் அதைப் படித்துப்பார்க்கவில்லை. நான்

கொடுத்த புகாருக்கும் நீதிமன்றத்தில் அளித்த சாட்சியத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

2. நான் நாகர்கோவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபரை 1 ம் பிரதிவாதியாகவும், ஜெயகிருஷ்ணன் என்பவரை 2 ம் பிரதிவாதியாகவும், மணவாளக்குறிச்சி சார்பதிவாளரை 3 ம் பிரதிவாதியாகவும், மாவட்ட ஆட்சித் தலைவரை 4 வது பிரதிவாதியாகவும் சேர்த்து உரிமையியல் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

3. மேற்படி வழக்கில் 1 வது பிரதிவாதி 2 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த 2 சொத்தையும் 1 ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த சொத்தையும் சேர்த்து மொத்தம் 3 பத்திரத்தையும் ரத்து செய்வதற்கு நான் பரிகாரம் கேட்டேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் 2 வது பிரதிவாதியான ஜெயகிருஷ்ணனையும் என்னையும் கூப்பிட்டு சமாதானம் பேசினார்கள் என்றால் சரிதான். அதில் நாங்கள் சமாதானம் பேசி முடிக்கப்பட்டது என்று சொன்னால் சரிதான். 15 இலட்சம் ரூபாய் நான் கொடுக்கவேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

4. மேற்படி தொகை கொடுக்கப்படும் காலம் வரை 1 சதவீத வட்டி என்றும், அந்த பணத்தை கொடுத்து முடிக்கும் காலம்வரை மேற்படி சொத்து பற்றுகையில் இருக்கும் என்று உத்தரவிடப்பட்டது என்றால் சரிதான். அதன் அடிப்படையில் 1 ம் பிரதிவாதியான இந்த வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதிலிருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். எனக்கு அந்த தீர்ப்பை பற்றி தெரியும். மேற்படி தீர்ப்பின் சான்றிட்ட நகல் Ex.D1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதற்கான பிராது Ex. D2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5. நான் 20 இலட்ச ரூபாய் D.D எடுத்து 2 ம் பிரதிவாதியிடம் நீதிமன்றத்திற்கு வெளியில் வைத்து கொடுத்துவிட்டேன். நானும் எனது வக்கீலும் ஜெயகிருஷ்ணனின் வக்கீலாகிய என் வீட்டிற்கு வந்து மேற்படி பணத்தை தருவதாக சொன்னதை வக்கீலாகிய நான் ஏற்றுக் கொள்ளவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி ஜெயகிருஷ்ணன் தரவேண்டிய வழக்கறிஞர் தொகையை இந்த வழக்கின் வாதியாகிய நான் தருவேன் என்று என்னுடைய வழக்கறிஞருடன் வந்து சொன்னதை தான் மேற்படி ஜெயகிருஷ்ணனின் வக்கீலாகிய நான் நிராகரித்தேன் என்றால் சரிதான்.

6. மேற்படி தீர்ப்பில் சொன்னபடியான முழுத்தொகையை நான் செலுத்தாததால் தான் சொத்து மீதான பற்றுகை இன்னும் நீக்கவில்லை என்று சொன்னால் சரிதான். நிறைவேற்கை மனுவிலும் பிரதான வழக்கிலும் என் தரப்பில் ஒரே வக்கீல் தான். நான் இந்த வழக்கில் சொன்ன சம்பவயிடமும் மேற்படி உரிமையியல் வழக்கில் சொன்ன சம்பவயிடமும் வெவ்வேறானவை. நான் புகார் மனுவை ஒரு நாள் முன்பே கொடுத்துவிட்டேன். புகார் மனுவை நானும் எனது வழக்கறிஞரும் சேர்ந்து போய் கொடுத்தோம் என்றால் சரிதான்.

7. புகார் கொடுத்த மறுநாள் காலை என்னை போலீசார் விசாரித்தார்கள். அப்போது என்னுடைய வழக்கறிஞர் இல்லை. என்னை விசாரித்தார்கள், எழுதினார்களா என்று தெரியாது. நானும் மேற்படி ஜெயகிருஷ்ணனும் ஓரே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். குற்றம் சுமத்தப்பட்ட நபர் வேறு சமுதாயத்தைச் சார்ந்தவர் என்றால் நான் சொல்லவில்லை. நான் செலுத்திய வட்டி தொகையை வங்கி வழியாக தான் செலுத்தினேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரின்

வங்கி கணக்கு எண் தற்சமயம் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக நான் பணம் செலுத்திய ரசீதுகளை நிலையத்தில் கொடுத்தேன். இந்த குற்றவியல் வழக்கானது குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எழுதிக்கொடுத்த சொத்தை திரும்ப பணம் தராமல் பெறவேண்டும் என்பதற்காக உண்மைக்கு மாறாக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

நான் நீதிமன்றத்தில் உண்மைக்கு மாறான சங்கதிகளை கூறி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

**IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 60/2019 P.W. 2/L.W.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. செல்வராஜ் | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. செல்லையபன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.03.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். அ.சா1 ஐ எனக்குத் தெரியும். 4 மாதம் என் மனைவி ரூபாய் 15 ஆயிரம் வீதம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்குக் கொடுத்தார். நான் வழக்கு சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. வேறு எதுவும் எனக்குத் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி அரசுத்தரப்பு சங்கதிகளிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட சங்கதியை இந்நீதிமன்றத்தில் சாட்சியமளித்திருப்பதால் மேற்படி தனது தரப்பு சாட்சியை நீதியின் நலன் கருதி குறுக்குவிசாரணை செய்ய கேட்கிறார். இந்நீதிமன்றம் வழக்கின் தன்மை கருதி இந்திய சாட்சிய சட்டம் 1872 பிரிவு 154-ன் கீழ் அனுமதிக்கிறது.**

**அரசுத்தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 07.11.2017 ம் தேதி காலை 10.00 மணிக்கு வழக்கின் வாதியிடம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் அதிக வட்டிக் கேட்டு கொலைமிரட்டல் விடுத்ததாகவும் அதை நான் நேரிட்டு பார்த்தேன் என்றும் கூறிவிட்டு தற்சமயம் வழக்கின் உண்மை நிலையை மறைத்து எனக்கே தெரிந்த

காரணத்திற்காக உண்மை சங்கதியை மாற்றி சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

**இல்லை .**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.

## IN THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 60/2019 P.W. 3/L.W.4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. காசி | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. நாராயணபெருமாள் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 19.03.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்.**

**1.** நான் மேற்கண்ட முகவரியில் வசித்து கூலி வேலைச் செய்து வருகிறேன். அ.சா1 ஐத் தெரியும். ஆஜர் குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியும். சிறுவயதில் இருந்தே எனக்குத் தெரியும். என் மருமகனான ஜெயகிருஷ்ணன் ஆவணங்களைப் பார்த்து சொத்தினை விலைக்கு வாங்கினார். மேற்படி சொத்தில் ஒரு வீடு உள்ளது. அந்த வீட்டில் அ.சா1ன் தம்பி இருந்தார். அ.சா1 சென்னையில் இருந்தார்.

2. ஒருநாள் மகாலிங்கம் அவரது வீட்டிற்கு வந்திருந்தார். நான் ஜெகனிடம் நீதானப்பா சொத்தை வாங்கிக் கொடுத்தே, அதில் ஆட்கள் இருக்காங்க அது என்னன்னு சீக்கிரம் விசாரிச்சி கொடு என்று சொன்னேன். ஜெகன் அங்கு வந்துவிட்டார். ஜெகனும் மகாலிங்கமும் ஒன்றாக பேசிக்கொண்டிருந்தார்கள். நான் என் விளையில் நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது 2 வக்கீல்கள் மற்றும் எஸ்.ஐ உடன் வந்தார்கள். பேசிக்கொண்டிருந்த ஜெகனை பிடித்துச்சென்றார்கள். போகும் போது என்னையும் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

3. காலை 11.00 மணிக்கு ஸ்டேசனுக்கு என்னையும் கூட்டிச் சென்றார்கள். மாலை 06.00 மணிக்கு தான் விட்டார்கள். என் துண்டை கூட எடுக்கவிடவில்லை. என்னுடைய மகன் பரமசந்திரன் அங்கு வந்தார். என்னை நிலையத்திற்குள்ளும் அனுமதிக்கவில்லை, நிலையத்திற்கு வெளியிலும் விடவில்லை. என் மகன் பத்திரத்தைக் கொண்டு வந்துக்கொடுத்தார். ஸ்டேசன்ல தான் கொண்டு வந்து கொடுக்க சொல்லியிருப்பாங்க. பின்னர் என்னை விட்டுவிட்டார்கள். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**குறுக்கு விசாரணை** :

**இல்லை .**

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.